www.Padasalai.Net www.Trb Tnpsc.com

# ஸ்ரீ வித்யபாரதி

# மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,

சக்கராம்பாளையம், அகரம் (PO),எலச்சிப்பாளையம்
திருச்செங்கோடு (TK) நாமக்கல்(DT) 637202.
Cell :99655-31727, 99655-35967,94422-88402, 80726-68664

## மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு, மார்ச் - 2024

## *TENTATIVE ANSWER KEY (01.03.2024)*

வகுப்பு – 12 - பொதுத்தமிழ்

காலஅளவு :3.00 மணி நேரம் மதிப்பெண் :90

| வ.எண் | விடை | மதிப்பெண் | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| | பகுதி - I | | |
| | **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** | | |
| 1. | அ) அடி எதுகை, சீர்மோனை | 1 | 14 |
| 2. | ஈ) (1)-(iii), (2)-(iv), (3)-(ii), (4)-(i) | 1 | |
| 3. | ஈ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார் | 1 | |
| 4. | அ) நாய் | 1 | |
| 5. | அ) கடுக்காய் | 1 | |
| 6. | ஈ) (அ), (ஆ), (இ) அனைத்தும் | 1 | |
| 7. | ஆ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i) | 1 | |
| 8. | இ) (1) சரி; (2) சரி | 1 | |
| 9. | ஈ) சொல்வது – சொல்லியபடி செய்வது | 1 | |
| 10. | அ) வளர்ந்த | 1 | |
| 11. | இ) கிறித்துவமும் தமிழும் | 1 | |
| 12. | ஆ) குறியீடு | 1 | |
| 13. | அ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது | 1 | |
| 14. | இ) சாய்வு நாற்காலி | 1 | |
| | பகுதி - II<br>பிரிவு - 1<br>**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** | | 3x2=6 |
| 15. | ❖ உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும், அது உலகத்தின் அளவைவிட மிகப் பெரியதாகும். | 2 | 2 |
| 16. | ❖ நெடுநல்வாடை இருவகையில் பொருள் சிறந்து விளங்குகிறது. நெடுநல்வாடை – நெடுவாடை, நல்வாடை. | | 2 |

Kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

| | | | |
|---|---|---|---|
| | ❖ **நெடுவாடை** : தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துன்பமிகுதியால் நெடுவாடையாக இருந்தது.<br>❖ **நல்வாடை** : போர்ப் பாசறையிலிருக்கும் தலைவனுக்கு வெற்றி பெற ஏதுவான நல்வாடையாக இருந்தது. தலைவி, தலைவன் இருவர்பாலும் செயல்பட்ட வாடையின் இரு வேறுபட்ட தன்மைகளையும் ஒழுங்குபடுத்தி நெடுநல்வாடை என இந்நூல் பெயர்பெற்றது. | 1<br>1 | |
| 17. | **வசனம்**: ❖ சொல்லைச் சேர்க்கின்ற நேரத்தில் எதுகை, மோனைகளைச் சேர்க்காமல் அடியளவை அறியாமல் உருவாகும் வடிவம் வசனம் ஆகும்.<br>**கவிதை**: ❖ யாப்பின் நெறிகளுக்கு உட்பட்டு எதுகை, மோனை, முரண், இயைபு, அளபெடை அந்தாதி போன்றவற்றைப் பயன்படுத்தி யாப்பிலக்கண விதிக்குள் சொற்களைச் சேர்ப்பதுதான் 'கவிதை' ஆகும். | 1<br>1 | 2 |
| 18. | ❖ எனக்குள்ளே என்னைத் தொலைத்தபின் எனது முகம் முகவரியற்றுப் போனது என்கிறார் சுகந்தி சுப்பிரமணியன். | 2 | 2 |
| | **பிரிவு - 2**<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | | **2x2=4** |
| 19. | **புக்கில்:**<br>தற்காலிகத் தங்குமிடம் 'புக்கில்'(புறம் 221 - 6)<br>**தன்மனை:**<br>திருமணத்திற்குப்பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து, தனியாக வாழுமிடம் 'தன்மனை' (neolocal) என வழங்கப்படுகிறது. | 1<br>1 | 2 |
| 20. | ❖ உபாத்தியாயர் நெடுங்கணக்கைச் சொல்லிக்கொடுக்க, மாணாக்கன் அதனைப் பின்பற்றிச் சொல்லுவான்.<br>❖ இப்படி உபாத்தியாயர் ஒன்றைச் சொல்ல அதனை மாணாக்கர்கள் பலரும் சேர்ந்து சொல்வதை 'முறைவைப்ப' தென்று கூறுவார்கள்.<br>❖ உபாத்தியாயருக்குப் பிரதியாகச் சில சமயங்களிற் சட்டாம்பிள்ளை முறை வைப்பதுண்டு. | 1<br>1 | 2 |
| 21. | ❖ காலின் மெக்கன்சியின் தொகுப்புகளைக் கொண்டு 1869இல் உருவாக்கப்பட்ட நூலகம் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் ஆகும்.<br>❖ ஓலைச்சுவடிகள், தாள்சுவடிகள், புத்தகங்கள் எனப் பெரும் தொகுப்புகள் காணப்படுகிறது. | 1<br>1 | 2 |
| | **பிரிவு - 3**<br>**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** | | **7x2=14** |
| 22. | ❖ மொழியின் இயல்பை உணர்த்தும் இலக்கண விதிகளை அறிந்தும் கவனத்துடன் எழுதினால் பிழைகளைத் தவிர்க்க முடியும்.<br>❖ சிறிதளவு முயற்சியும் பயிற்சியும் தவறில்லாமல் எழுதத் துணை புரியும்.<br>❖ எழுத்துகள் சொல்லில் வரும் இடம்(முதல், இடை,கடை), வரிவடிவ வேறுபாடு அறிதல் வேண்டும்.<br>❖ எல்லா இடங்களிலும் பேச்சுத் தமிழை எழுத முடியாது. பேசுவதைப் போலவே எழுத எண்ணுவதே எழுத்துப் பிழைக்கு முதன்மையான காரணம்.<br>❖ எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும்<br>❖ ந,ண,ன / ல,ள,ழ / ற,ர ஒலிப்பு வேறுபாடு தெரிந்து ஒலிக்க வேண்டும். | 1 | 2 |

Kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

| | | | |
|---|---|---|---|
| | ❖ தமிழில் இவ்வெழுத்துகள் வரும் முறையையும் அவை ஏற்படுத்தும் பொருள் மாற்றத்தையும் அறிந்து கொள்வது இன்றியமையாத ஒன்றாகும்.<br>❖ தொடக்கத்தில் சிலகாலம் வாய்விட்டோ அல்லது மனத்துக்குள் உச்சரித்தபடியோ எழுதப்பழகுவது நல்லது.<br>❖ வேகமாக எழுத முயல்வது பிழைக்கு வழிகோலும். எனவே நிதானமாக எழுதுவது நல்லது.<br>❖ கெ, கே, கொ, கோ போன்று கொம்புடைய குறில் நெடில் வேறுபாட்டினைப் புரிந்து எழுத வேண்டும்.<br>**(எவையேனும் இரண்டு எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 1 | |
| 23. | மாணவர்கள் பெற்றோர்களை**த்** தமது நண்பர்களாக**ப்** பாவித்து நட்புக்கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை**ப்** பெற்றோர்களுடன் **பகிர்ந்து** கொள்ள வேண்டும். | 2 | 2 |
| 24. | அரங்கன் **வெண்கலப்** பாத்திரக்கடை வைத்திருக்கிறார். | 2 | 2 |
| 25. | நிலத்தைக் கிளற (உழ)வேண்டுமடா அப்போதுதான் வயிறு நிறையும். | 1<br>1 | 2 |
| 26. | **தின்மை – திண்மை :**<br>தின்மை - தீமை ; திண்மை - வலிமை<br>❖ பிறர் செய்யும் தின்மையைப் பொறுப்பதே மிகச்சிறந்த திண்மையாகும்.<br>**(பொருத்தமான விடையிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 2 | 2 |
| 27. | **அ) செய்த = செய் + த் + அ**<br>செய் - பகுதி<br>த் - இறந்தகால இடைநிலை<br>அ - பெயரெச்ச விகுதி<br>**ஆ) கலங்கி = கலங்கு + இ**<br>கலங்கு - பகுதி<br>இ - வினையெச்ச விகுதி | 1<br>1<br>1<br>1 | 2 |
| 28. | **அ)** Stapler - கம்பித் தைப்புக் கருவி<br>**ஆ)** Teller - விரைவுக் காசாளர் | 1<br>1 | 2 |
| 29. | **அ) உரனுடை= உரன்+ உடை**<br>"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே"<br>**ஆ) தலைக்கோல் = தலை + கோல்**<br>இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் | 1<br>1<br>1<br>1 | 2 |
| 30. | **அ) கோவில்**<br>**கோவில் - ஆலயம்**<br>❖ தஞ்சைக் கோவில் கட்டடக்கலைக்குச் சிறந்த சான்றாக அமைகிறது.<br>**கோ இல்(அரசன் தங்குமிடம்)**<br>❖ கோ இல்லில்(அரசன் தங்குமிடம்) போர் வீரர்கள் வந்து அரசனிடம் பரிசு பெற்றனர்.<br><br>**ஆ) தாமரை**<br>**தாமரை – ஒரு வகை மலர்**<br>❖ தாமரை மலர்கள் குளத்தில் அழகாகப் பூத்திருந்தன.<br>**தா மரை – தாவுகின்ற மான்**<br>காட்டில் தா மரை(தாவுகின்ற மான்) வாழும்.<br>**(பொருத்தமான விடையிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்)** | 1<br><br>1 | 2 |

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

| | பகுதி – III<br>பிரிவு - 1<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | | 2x4=8 |
|---|---|---|---|
| 31. | **இடம் :**<br>தண்டி என்பவரால் எழுதப்பட்ட தண்டியலங்காரம் என்னும் நூலில் தன்னேர் இலாத தமிழ் - தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல் பொருளணியியல் பகுதியில் இடம் பெற்றுள்ளது.<br>**பொருள்:**<br>ஒலிக்கின்ற நீர் நிறைந்த கடலால் சூழப்பட்ட இந்த உலகத்தின் புற இருளை அகற்றும் என்பது இவ்வடியின் பொருளாகும்.<br>**விளக்கம் :**<br>மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது ஒன்று. பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புவமை இல்லாததுமாக இருப்பது இன்னொன்று. இருளைப் போக்கும் இவ்விரண்டில் ஒன்று ஒளிர்கின்ற கதிரவன்; இன்னொன்று தனக்கு நிகரில்லாத தமிழ். | 2<br>1<br>1 | 4 |
| 32. | ❖ இராவணன் சீதையைச் சிறையெடுத்த போது கழுகு வேந்தன் சடாயு தடுத்துச் சண்டையிட்டுக் காயப்படுகிறான்.<br>❖ இராமனிடம் நடந்ததைக் கூறுகிறான்; பின் இறந்துவிடுகிறான்.<br>❖ இராமன், தன் தந்தையின் நண்பனான அக்கழுகு வேந்தனையும் தன் தந்தையாகவே கருதி, மகன் நிலையில் அவனுக்குரிய இறுதிச் சடங்குகளைச் செய்கிறான்.<br>❖ "எப்படிப்பட்ட சிறப்பான விறகுகள் இவை" என்று கண்டவர் வியக்கும்படியான கரிய அகில் கட்டைகளையும், சந்தனக் கட்டைகளையும் இராமன் கொண்டுவந்து குவித்தான்.<br>❖ தேவையான அளவு தருப்பைப் புற்களையும் ஒழுங்குபட அடுக்கினான்.<br>❖ பூக்களையும் கொண்டுவந்து தூவினான்.<br>❖ மணலினால் சடங்குகள் நிகழ்த்துவதற்குரிய மேடையைத் திருத்தமாக அமைத்தான்.<br>❖ நன்னீரையும் எடுத்து வந்தான்.<br>❖ இறுதிச்சடங்கு செய்யப்படக்கூடிய மேடைக்குத் தன் தந்தையாகிய சடாயுவைப் பெரிய கைகளில் தூக்கிக் கொண்டு சென்று அடுக்கப்பட்ட விறகுகள் மீது இட்டான். | 1<br>1<br>½<br>½<br>½<br>½ | 4 |
| 33. | **சிலம்பு காட்டும் நாட்டிய அரங்கத்திற்கான இடம் :**<br>"எண்ணிய நூலோர் இயல்பினில் வழாஅது<br>மண்ணகம் ஒருவழி வகுத்தனர்"<br>திறம்படக் கற்றுணர்ந்த சிற்ப நூலாசிரியரால் சொல்லப்பட்ட இயல்புகளிலிருந்து மாறுபடாத நன்னிலத்தை ஆடல் அரங்கிற்காகத் தேர்ந்தெடுத்தனர்.<br>**மூங்கில்கொணர்தல் :**<br>பொதிகைமலை போன்ற மலைகளிலே நீண்டு வளர்ந்த மூங்கில்களிலே, ஒன்றுக்கொன்று இடையே ஒரு சாண் அளவு கணுக்களைக் கொண்ட மூங்கில்களைக் கொண்டு வந்தனர். | ½<br>½<br>½ | 4 |



www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

<table>
<tr>
<td></td>
<td>
ஆடல் அரங்கம் அமைத்தல் :<br>
“நூல்நெறி மரபின் அரங்கம் அளக்கும்”.<br>
நூல்களில் கூறப்பட்ட முறையில் மூங்கில் கோல் அளவுகொண்டு அரங்கம் அமைத்தனர்.<br>
மூங்கில் அளவுகோல் :<br>
தம் கைப்பெருவிரலில் இருப்பத்து நான்கு அளவு கொண்டதாக அம்மூங்கிலை வெட்டினர். அதை அரங்கம் அமைக்கும் கோலாகக் கொண்டனர்.<br>
அதில் ஏழுகோல் அகலமும் எட்டுக்கோல் நீளமும் ஒருகோல் உயரமும் உடையதாக நாட்டிய அரங்கம் அமைத்தனர்.<br>
அரங்கில் தூணிற்கு மேல் வைத்த உத்திரப் பலகைக்கும் தளத்தில் இருக்கும் பலகைக்கும் இடையே, இடைவெளி நான்குகோல் அளவாக இருந்தது.<br>
அரங்கின் உள்ளே செல்லவும் வெளியே வரவும் ஏற்ற அளவுகளுடன் இரு வாயில்கள் அழகாக அமைக்கப்பட்டிருந்தன.<br>
மேல்நிலை மாடத்தில் ஐம்பூதங்களை யாவரும் புகழும்படி சித்தரித்து வைத்தனர்.<br>
தூண்களின் நிழலானது, அவையிலும் நாடக அரங்கிலும் விழாதபடி நல்ல அழகான நிலைவிளக்குகளை நிறுத்தினர்.<br>
மேடையின் ஒரு புறத்திலிருந்து மறுபுறத்திற்குச் செல்லுமாறு அமைக்கப்படும் ஒரு முகத்திரை, மேடையின் இரு புறத்திலிருந்தும் நடுவில் ஒன்றோடு ஒன்று பொருந்துமாறு அமைக்கப்படும் பொருமுகத்திரை, மேடையின் மேலிருந்து வேண்டும்போது கீழே இறக்கும் வகையில் அமைக்கப்படும் கரந்துவரல் திரை, இவை மூன்றையும் சிறப்புடன் அமைத்தனர்.<br>
ஓவிய வேலைப்பாடு மிக்க மேல் விதானத்தையும் அமைத்தனர். அத்துடன் சிறந்த முத்துகளால் இயன்ற மாலைகளை அரங்கம் முழுவதும் தொங்கவிட்டனர்.
</td>
<td>½<br><br><br><br>½<br><br><br>½<br><br><br><br><br><br><br>½<br><br><br><br><br>½</td>
<td></td>
</tr>
<tr>
<td>34.</td>
<td>
<table>
<tr><th>வ. எண்</th><th>கடையெழு வள்ளல்கள் பெயர்</th><th>செய்த செயல்</th></tr>
<tr><td>1</td><td>பேகன்</td><td>மயில் குளிரால் நடுங்குகிறது என எண்ணித் தன்னுடைய போர்வையைக் கொடுத்தான்.</td></tr>
<tr><td>2</td><td>பாரி</td><td>கொம்பின்றித் தவித்துக்கொண்டிருந்த முல்லைக்கொடி பற்றிப் படரத் தனது தேரினை ஈந்தான்.</td></tr>
<tr><td>3</td><td>காரி</td><td>குதிரைகளையும், ஏனைய செல்வங்களையும் இனிய மொழிகளுடன் இரவலர்க்கு இல்லையென்னாமல் கொடுத்தான்</td></tr>
<tr><td>4</td><td>ஆய்</td><td>ஒளிமிக்க நீலவண்ணக் கல்லையும், நாகம் கொடுத்த ஆடையினையும் இறைவனுக்குக் கொடுத்தான்</td></tr>
<tr><td>5</td><td>அதிகன்</td><td>தனக்குக் கிடைத்த அரிய நெல்லிக்கனியை ஔவைக்கு வழங்கினான்.</td></tr>
<tr><td>6</td><td>நள்ளி</td><td>தன்னிடம் உள்ள பொருட்செல்வத்தை இல்லையென்னாது நட்புக்கொண்டவர்களின் குறிப்பறிந்து வழங்கினான்.</td></tr>
<tr><td>7</td><td>ஓரி</td><td>வளங்கள் நிறைந்த சிறிய மலைநாட்டைக் கூத்தர்க்குப் பரிசாய் வழங்கினான்.</td></tr>
</table>
</td>
<td>4</td>
<td>4</td>
</tr>
</table>

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

| | | | |
|---|---|---|---|
| | பிரிவு - 2<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | | **2x4=8** |
| 35. | ❖ நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.<br>❖ புயல், வெள்ளம், சுனாமி, நிலநடுக்கம், தீ விபத்து, பனிப்புயல், வறட்சி, வேதி விபத்துகள் முதலான பேரிடர்கள் நிகழும்போது பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற இந்த ஆணையம் உதவுகிறது.<br>❖ இக்குழுக்கள் மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் பேரிடர் காலங்களில் இவ்வாணையம் செயல்பட வழிவகை செய்துள்ளது.<br>❖ அரசு தீயணைப்புத்துறை, காவல், தன்னார்வத் தொண்டு நிறுவனம் போன்ற பாதுகாப்பு அமைப்புகள் தயார் நிலையில் இருத்தல் வேண்டும்.<br>❖ இதற்காகப் பல்வேறு குழுக்களையும் அமைத்திருக்கிறது. | 1<br>1<br>1<br>1 | 4 |
| 36. | **மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்:**<br>பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். அதனால் அவர்களுடைய எழுத்துக்கள் வரிசையாகவும் நன்றாகவும் அமையும்.<br>உபாத்தியாயர் முதலில் தரையில்(மணலில்) எழுத அதன் மேல் பிள்ளைகள் விளம்புவார்கள். பிறகு தாமே எழுதி எழுதிப் பழகுவார்கள்.<br>**கையெழுத்து:**<br>**“கொம்புசுழி கோணாமல் கொண்டபந்தி சாயாமல்**<br>**அம்புபோல் கால்கள் அசையாமல் - தம்பி**<br>**எழுதினால் நன்மை யுண்டு”** என்று வரும் பழைய வெண்பா ஒன்று உண்டு. எழுத்துக்கள் ஒன்றோடொன்று படாமல் வரிகோணாமல் பழைய காலத்தில் எழுதி வந்தார்கள். பழைய ஏட்டுச்சுவடிகளைப் பார்த்தால் இது விளங்கும்.<br>**எழுத்தின் வடிவம்**<br>எழுத்துக்களின் உருவங்கள் பல காலமாக மாறாமல் இருந்துவந்தன. புள்ளி, கால், கொம்பு, விலங்கு முதலியவை வரியெழுத்தின் உறுப்புக்கள்.<br>பெரியோர்கள் பழக்கி வந்த பழக்கத்தால் பல நூறு வருஷங்களாகியும் எழுதும் வழக்கத்தில் பெரிய மாறுபாடுகள் ஏற்படவில்லை. கருங்கல்லில் எழுதினால் பிற இடங்களுக்குக் கொண்டு செல்வது கடினமாகும். ஓலைச்சுவடிகளில் எழுத்தாணிகளைக் கொண்டு எழுதினர். கல்வெட்டுகளில் கல்தச்சர்களால் சிற்றுளி கொண்டு எழுத்துகள் பொறிக்கப்பட்டன. களிமண் பலகைகளில் எழுத்தாணி கொண்டே எழுதினர். மணலில் எழுதிக் கற்ற பழக்கம், பின் சிலேட்டுக்குச்சி கொண்டு சிலேட்டில் எழுதும் பழக்கமாகி, இன்று பேனா பிடித்து எழுதும் பழக்கமாய் மாறியுள்ளது. இனி வருங்காலத்தில் எப்பழக்கம் உருவெடுக்குமோ?<br>**(பொருத்தமான விடையிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 | 4 |
| 37. | ❖ சென்னை நகரின் ஒவ்வொரு பகுதிக்கும் வரலாறு உண்டு.<br>❖ அந்தப் பண்பாட்டு அடையாளங்களை எண்ணிக்கையில் அடக்குதல் மிகக் கடினம்.<br>❖ இந்திய சாரசனிக் கட்டடக்கலை பாணியில் கட்டப்பட்ட பல கட்டடங்கள் இன்றும் சென்னையின் பழமையைப் பறைசாற்றுபவை. | 4 | 4 |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| | ❖ ஆவணங்களை முறையாகக் கையாளும் பழக்கம் கொண்ட ஆங்கிலேயர் உருவாக்கிய 'மெட்ராஸ் ரெக்காட் ஆபீஸ்' சாரசனிக் கட்டட முறையில் அமைந்தது.<br>❖ இது, இன்று தமிழ்நாடு ஆவணக் காப்பகம் என்று வழங்கப்படுகிறது.<br>❖ தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றை அறிவதற்கான முதன்மைத் தரவுகள் பல இங்கே பாதுகாக்கப்பட்டுள்ளன.<br>❖ இந்தியாவின் முதல் பொதுநூலகமான கன்னிமாரா நூலகம், நவீனமாக வளர்ந்து வரும் பெரிய நூலகம்.<br>❖ இந்தியத் திரைப்படத் துறையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய சென்னைக்குத் திரைப்படத் தொழில் சார்ந்த இடங்கள், திரையங்கம் ஆகியவை குறிப்பிடத்தக்க அடையாளங்களாகும்.<br>❖ சென்னையின் புகழ்பெற்ற கட்டடங்களான மத்தியத் தொடர்வண்டி நிலையம், தென்னகத் தொடர்வண்டித் தலைமையகம், எழும்பூர் தொடர்வண்டி நிலையம், பொது அஞ்சல் அலுவலகம், உயர்நீதிமன்றம், சென்னைப் பல்கலைக்கழகம், ரிப்பன் கட்டடம், விக்டோரியா அரங்கு போன்றவை இந்தோ – சாரசனிக் கட்டடக் கலையின் சிறப்புகளை நமக்குக் காட்டுகின்றன. | | |
| 38. | ❖ நம் மண்வளத்தையும் இயற்கை வளத்தையும் பேணிக் காக்கும்பொருட்டு இயற்கை வேளாண்மை முறைகளை மேற்கொள்ள வேண்டும்.<br>❖ வேளாண்மைக்கு முக்கியமான நீர் மேலாண்மையில் சொட்டுநீர்ப்பாசனம் போன்ற புதிய விஞ்ஞானத் தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும்.<br>❖ சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல்<br>❖ உரிய நேரத்தில் விதைத்தல்<br>❖ நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல்<br>❖ அறுவடைக்குப்பின் பாதுகாத்தல்<br>❖ உரிய விலை வரும் வரை பாதுகாத்தல்<br>❖ இரசாயன உரத்தையும் பூச்சிக்கொல்லிகளையும் விடுத்து இயற்கை உரங்களைப் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியைப் பெருக்கலாம்.<br>❖ நிலத்திற்கு உகந்த சரியான பயிரைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்புணர்வு மற்றும் பொறுப்புணர்வோடு கூடிய நிருவாக நெறியும் இணைந்தால்தான் வேளாண்மை செழிக்கும்.<br>**சான்று:**<br>❖ தசரதன் தன் நாட்டை மிகவும் செப்பமாகவும் நுணுக்கமாகவும் ஆட்சி செய்தான் என்பதைக் கம்பர்,<br>**"வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர் செய் எனக் காத்து இனிதுஅரசு செய்கின்றான் - பாலகாண்டம் - 179)** என்கிறார். 'வறியவன் ஒருவன் தன் சிறு வயலைப் பாதுகாப்பது போல, இவ்வுலகம் முழுவதையும் பாதுகாத்து மிகச்சிறந்த முறையில் ஆட்சி செய்தான்' என்று அவர் குறிப்பிடுகிறார். | 1<br><br>1<br><br>1<br><br>1 | 4 |
| | **பிரிவு - 3**<br>**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** | | **3x4=12** |
| 39. | **அணிச்சுட்டல்:**<br>**சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும் ஏமப் புணையைச் சுடும்** - இக்குறட்பாவில் ஏகதேச உருவக அணி பயின்று வந்துள்ளது. | 2 | 4 |

| | | | |
|---|---|---|---|
| | **அணி இலக்கணம்:**<br>தொடர்புடைய இரு பொருட்களுள், ஒன்றை மட்டும் உருவகம் செய்து மற்றொன்றை உருவகம் செய்யாமல் விடுவது ஏகதேச உருவக அணி ஆகும்.<br>**சான்று விளக்கம்:**<br>❖ சினம், தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு.<br>❖ அது ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.<br>**அணிப்பொருத்தம்:**<br>சினத்தை நெருப்பாகவும் இனத்தைத் தெப்பமாகவும் உருவகம் செய்த வள்ளுவர், உலக வாழ்க்கையைக் கடலாக உருவகம் செய்யாமல் விட்டுவிட்டார். இது ஏகதேச உருவக அணியாகும். | 1<br><br><br><br><br><br><br>1 | |
| | **(அல்லது)**<br>**ஆ)**<br>**அணி இலக்கணம் :**<br>உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒரு வாக்கியமாகவும் உரும உருபு வெளிப்படையாகவும் வந்தால் உவமையணி ஆகும்.<br>**சான்று :**<br>உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்<br>பாம்போடு உடன்உறைந் தற்று<br>**சான்று விளக்கம்:**<br>அகத்தில் உடன்பாடு இல்லாதவருடன் கூடி வாழும் வாழ்க்கை, ஒரு குடிசையில் பாம்புடன் வாழ்வது போன்றதாகும்.<br>**அணிப் பொருத்தம் :**<br>**உவமை** : குடங்களுள் பாம்போடு<br>**உவமேயம்** : உடம்பாடு இலாதவர் வாழ்க்கை<br>**உருபு** : அற்று (வெளிப்படை) | 2<br><br><br><br>1<br><br>1<br><br><br>1 | 4 |
| 40. | **இலக்கிய நயம் பாராட்டல்**<br>மையக்கருத்து, திரண்ட கருத்து<br>எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தம், சுவை<br>**(மையக்கருத்தை எழுதி ஏதேனும் மூன்று நயங்கள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 | **4** |
| 41. | அ) **திணை இலக்கணம் :**<br>வெற்றிபெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப் பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவது வாகைத் திணையாகும்.<br>**சான்று :**<br>**வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்**<br>**பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென....**<br>- என்ற மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் எழுதிய நெடுநல்வாடைப் பாடல் இத்திணைக்குச் சான்றாகும்.<br>**திணைப் பொருத்தம்:**<br>வாடைக் காலத்தில் மேகம் மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து பூமி குளிரும்படி மழைப் பெய்தது. வாடைக்காற்றின் குளிர்ச்சி மிகுதியாலும் உடலுக்குச் சூடேற்ற பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றினர். அவர்களோடு மன்னனும் பாசறையில் குளிர்காலத்தில் வெற்றியைக் கொண்டாடினான்.<br>**(பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br><br><br>1<br><br><br>2 | **4** |

www.Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| | **(அல்லது)**<br>**ஆ) துறை இலக்கணம்:**<br>அரசர்க்கு நல்லறிவு புகட்டுதலைக் கூறும் புறத்துறை செவியறிவுறூஉ ஆகும். செய்ய அறிவுறுத்துதல் செவியறிவுறூஉ என்னும் துறையாகும்.<br>**சான்று :**<br>**'காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே'** எனத் தொடங்கும் பிசிராந்தையார் எழுதிய புறநானூற்றுப்பாடல் இத்திணைக்குச் சான்றாகும்.<br>**சான்று விளக்கம்:**<br>ஒரு மாவிற்கும்(ஓர் ஏக்கரில் மூன்றில் ஒரு பங்கிற்கும்) குறைந்த நிலமாயினும் அதன்கண் விளைந்த நெல்லை அறுத்து உணவாக்கிக் கவளமாகக் கொடுத்தால் யானைக்குப் பல நாட்களுக்கு உணவாகும்.<br>**துறைப் பொருத்தம்:**<br>அறிவுடை வேந்தன், வரி திரட்டும் முறை அறிந்து மக்களிடமிருந்து வரி திரட்டினால், நாடு கோடிக் கணக்கில் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும் எனப் பிசிராந்தையார் கூறுகிறார். அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறை தவறாமல் செய்யுமாறு வலியுறுத்துவதால் இது இத்துறைக்குப் பொருத்தமாக அமைகிறது.<br>**(பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>1<br>1<br>1 | |
| 42. | **வாழ்க்கை நிகழ்வில் பழமொழி**<br>அ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை<br>**(அல்லது)**<br>ஆ) ஊழி பெயரினும் தாம் பெயரார்<br>பழமொழி விளக்கம்<br>வாழ்க்கை நிகழ்வில் பழமொழி (கதை)<br>அறியும் கருத்து (நீதி)<br>**(பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 | **4** |
| 43. | **தமிழாக்கம் தருக.**<br>1) மக்கள் உங்களைப் புரிந்து கொள்ள வேண்டுமெனில் நீங்கள் அவர்களது மொழியில் பேச வேண்டும்.<br>2) ஒரு புதிய மொழி என்பது ஒரு புதிய வாழ்க்கையைப் போன்றது.<br>3) என் மொழியின் எல்லையே உலகின் எல்லை<br>4) மொழிகளின் அறிவு ஞானத்திற்கான வழித்தடம்.<br>**(பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>1<br>1<br>1 | 4 |
| | பகுதி –IV<br>**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** | | **3x6=18** |
| 44. | அ)<br>**முன்னுரை:**<br>குகன், சடாயு, சவரி, சுக்ரீவன், வீடணன் எனப் பிற உயிர்களுடன் இராமன் கொண்டிருந்த உறவு நிலை கம்பராமாயணத்தில் சிறப்பான இடத்தைப் பெற்றது.<br>'தன்னைப் போலப் பிறரை நினை' என்ற கூற்றைப் போல இராமன் வாழ்ந்ததை இப்பகுதி எடுத்துக் கூறுகிறது.<br>**குகன்:**<br>வேடுவர் தலைவன் குகன். பாறை உடலுக்குள் பஞ்சு உள்ளம் கொண்டவன் அவன். காட்டிற்குச் செல்லும் இராமன், கங்கையைக் கடக்க அவன் உதவுகிறான்.<br>அன்பிற்கு அடைக்கும் தாழ் இல்லை என்பதை நிறுவும் வகையில், இராமன் குகன் நட்பு மகிழ்கிறது. | | 6 |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

தன்மீது அளவற்ற அன்பு கொண்ட குகன் தன்னைப் பிரிய விருப்பமில்லாததை உணர்ந்து 'என் உயிர் அணையாய்' என்றான். ''நீ என் உயிர் போன்றவன்'' என்று கூறியது மட்டுமல்லாது, நீ சொல்லும் வேலைகளைச் செய்யும் பணியாளனாய் இருக்கின்றேன். குகனின் அன்பால் தன்னை அவனுடைய பணியாளாய்க் கருதும் உரிமையை இராமன் குகனுக்குக் கொடுத்திருந்தான். இராமன் இளவரசனாக இருப்பினும் வேடனான குகனை உடன்பிறப்பாக ஏற்றுக் கொள்கிறான். குகன் கூறியவற்றைக் கேட்ட இராமன் ''என் உயிர் போன்றவனே! நீ என் தம்பி; இலக்குவன் உன் தம்பி; அழகிய நெற்றியைக் கொண்ட சீதை உன் அண்ணி; குளிர் கடலும் இந்நிலமும் எல்லாம் உனதேயாகும். நான் உன்னுடைய ஏவலுக்கேற்பப் பணிபுரிபவன்' என்று இராமன் கூறினான்.

**சடாயு:**

இராவணன் சீதையைச் சிறையெடுத்த போது கழுகு வேந்தன் சடாயு தடுத்துச் சண்டையிட்டுக் காயப்படுகிறான். இராமனிடம் நடந்ததைக் கூறுகிறான்; பின் இறந்துவிடுகிறான். இராமன், தன் தந்தையின் நண்பனான அக்கழுகு வேந்தனையும் தன் தந்தையாகவே கருதி, மகன் நிலையில் அவனுக்குரிய இறுதிச் சடங்குகளைச் செய்கிறான். ''எப்படிப்பட்ட சிறப்பான விறகுகள் இவை'' என்று கண்டவர் வியக்கும்படியான கரிய அகில் கட்டைகளையும், சந்தனக் கட்டைகளையும் இராமன் கொண்டுவந்து குவித்தான். தேவையான அளவு தருப்பைப் புற்களையும் ஒழுங்குபட அடுக்கினான். பூக்களையும் கொண்டுவந்து தூவினான். மணலினால் சடங்குகள் நிகழ்த்துவதற்குரிய மேடையைத் திருத்தமாக அமைத்தான். நன்னீரையும் எடுத்து வந்தான். இறுதிச்சடங்கு செய்யப்படக்கூடிய மேடைக்குத் தன் தந்தையாகிய சடாயுவைப் பெரிய கைகளில் தூக்கிக் கொண்டு சென்று அடுக்கப்பட்ட விறகுகள் மீது இட்டான்.

**சவரி:**

இராமனிடம் மிகுதியான அன்பையும் பக்தியையும் கொண்டவள் சவரி. சீதையைத் தேடிவரும் இராமனை, சுக்ரீவனுடன் நட்புக் கொள்ளுமாறு செய்தவள் இவள். அவ்வகையில் காப்பியத்தின் போக்கில் ஒரு திருப்பத்தை உருவாக்குபவள் சவரி. தன்னைக் கண்ட பிறகுதான் பிறவி ஒழிப்பேன் என்று தவம் இருந்த சவரியிடம் பரிவு காட்டிப் பேசினான் இராமன். இராமனைக் கண்டதால்தான் பிறந்ததின் பயனை அடைந்ததாக உணர்ந்த சவரி, இராமன், இலக்குவனுக்கு விருந்து அளித்து மகிழ்ந்தாள். தனது அன்புக்குரியவராக விளங்கிய சவரியிடம் தாயிடம் காட்டும் அன்பைக் காட்டினான் இராமன்.

**சுக்ரீவன்:**

சீதையைத் தேடிவரும் இராம இலக்குவரைக் கண்ட அனுமன், சுக்ரீனிடம் அழைத்து வந்தான். தனக்காக இலங்கை சென்று கடும்போர் புரிந்து இராவணனிடம் மணிமகுடத்தை எடுத்து வந்த சுக்ரீவனை நினைத்துப் பெருமைப்பட்டான் இராமன். நீ வேறு நான் வேறு அல்ல; உன் பகைவர் என் பகைவர் ; உன் உறவினர், என் உறவினர்; அன்பு மிகுந்த என் சுற்றத்தினர், உன் சுற்றத்தினர்; ''நீ என் இனிய உயிர் நண்பன்'' என்று கூறினான் இராமன். இராமன், சுக்ரீவனைத் தன் உயிர் நண்பனாகக் கருதும் உரிமையைக் கொடுத்தான். மேலும் அவனைச் சகோதரனாக ஏற்றுக் கொள்கிறான்.

6

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

**வீடணன்:**
சீதையைக் கவர்ந்து வந்தது தவறென வீடணன், இராவணனிடம் கூறுகிறான். அவன் கூற்றை மதியாத இராவணன், வீடணனைக் கடிந்தான். இலங்கையை விட்டுவந்து அடைக்கலம் வேண்டினான், வீடணன். இராமன் அவனை உடன்பிறந்தவனாக ஏற்று இலங்கை அரசை அவனுக்கு உரிமையாக்கினான். ஆணைச்சக்கரத்தையுடைய இராமன் உள்ளத்தில் கருணை பொங்க வீடணனிடம், “ஒளிபொருந்திய பற்களை உடைய அரக்கர் வாழும் ஆழமான கடல் நடுவே உள்ளதுமான இலங்கை அரசாட்சி, ஏழேழாகிய பதினான்கு உலகங்களும் எனது பெயரும் இங்கு எவ்வளவு காலம் இருக்குமோ அவ்வளவு காலம் உனக்கே உரிமை எனக் கொடுத்தேன்” என்று கூறினான்.

**முடிவுரை:**
பிற உயிர்களை நேசிக்கும் இராமன், குகனைத் தன் உடன் பிறப்பாகவும், சடாயுவைத் தன் தந்தையாகவும் சவரியைத் தன் தாயாகவும், சுக்ரீவனைத் தன் நண்பனாகவும், வீடணனைச் சகோதரனாகவும் ஏற்றுக்கொண்டு பண்பின் படிமமாக விளங்குகிறார்.

**(அல்லது)**

**ஆ)**

**முன்னுரை :**

**திரு + குறள் = திருக்குறள்**

**திரு** என்னும் சொல்லிலேயே மேன்மை பொருந்தியிருத்தலைக் காணலாம்.

தாஜ்மஹாலிலிருந்து ஒரு கல்லை எடுத்துவிட்டு, அதற்குச் சமமான ஒளியுடைய ஒரு கல்லைப் பொருத்தி விடலாம். ஆனால் திருக்குறளிலிருந்து ஒரு சொல்லை எடுத்துவிட்டு, அதற்குச் சமமான வேறொரு சொல்லைப் பொருத்த முடியாது என்பார் மதுரை இளங்குமரனார் அவர்கள். இத்தகைய சிறப்புடைய இந்நூல் ‘உலகப்பொதுமறை’ எனப் போற்றப்படுகிறது.

அறிவுடைமை வாழ்வின் உயர்விற்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழி காண்போம்.

**கருவி :**

**“அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்**
**உள்அழிக்கல் ஆகா அரண்”**

அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும்; அன்றியும் பகைவரால் அழிக்க முடியாத பாதுகாப்பு அரணும் அதுவே ஆகும். 6 6

**அறிவு :**

**“சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு”**

மனத்தை, அது போகும் போக்கில் செல்லவிடாமல், தீமையிலிருந்து விலக்கி நல்ல வழியில் செலுத்துவதே அறிவாகும்.

**“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு”**

எப்பொருளை யார் யார் சொல்லக் கேட்டாலும் அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும்.

**“எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு**
**அவ்வது உறைவது அறிவு”**

உலகம் எத்தகைய உயர்ந்த நெறியில் செல்கிறதோ,

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

| | | | |
|---|---|---|---|
| | அந்நெறியில் தானும் உலகத்தோடு இணைந்து செல்வதே அறிவாகும்.<br>**துன்பம் இல்லை :**<br>**“எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை**<br>**அதிர வருவதோர் நோய்”**<br>பின்பு வரப்போவதை முன்பே அறிந்து காத்துக்கொள்ளும் வல்லமைகொண்ட அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.<br>**முடிவுரை :**<br>அறிவு பாதுகாப்புத் தரும் கருவி, நல்வழியில் செலுத்தக்கூடியது அறிவு, உண்மையைக் கண்டறிய உதவும் அறிவு, வருமுன் காப்பது அறிவு என்று மனித வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் வாழ்க்கையின் உயர்வுக்குத் துணையாய் நிற்பது அறிவே ஆகும். இதுவரை நாம் படித்ததிலிருந்து உணர்ந்தது என்னவெனில், “வள்ளுவரின் கருத்துகளைக் குறள்கள் என்று சொல்வதை விடவும் வாழ்க்கையின் சூத்திரங்கள் என்று கூறுதல் மிகவும் பொருந்தும்”<br>ஆதலால் நாமும் அறிவுடைமையோடு செயல்பட்டு , வள்ளுவனுக்கும் வள்ளுவன் குறளுக்கும் வணக்கம் செலுத்துவோம். | | |
| 45. | **அ)**<br>**முன்னுரை :**<br>இன்று போலப் பண்டைய நாளில் அரசு பொறுப்பேற்றுப் பள்ளிக்கூடங்களை நடத்தவில்லை. அதனால் கற்றறிந்த சிலர், தான் அறிந்தவற்றைக் கல்வியாய் மாணவர்களுக்குக் கற்பித்தனர். அதுபற்றி இனி அறிவோம்.<br>**வித்தியாரம்பம் அல்லது கல்வித் தொடக்கம் :**<br>முதன்முதலில் ஐந்தாம் பிராயத்தில் வித்தியாப்பியாசம் செய்யும்பொழுது தாய் தந்தையர் பிள்ளைகளை ஆசிரியர்களிடம் அடைக்கலமாகக் கொடுத்து வந்தார்கள். பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் வைக்கும் காலம் ஒரு பெரிய விசேட நாளாகக் கொண்டாடப் பெறும்.<br>**முறைவைப்பு :**<br>ஏட்டின்மீது மஞ்சள் பூசிப் பூசித்துப் பையனிடம் கொடுத்து வாசிக்கச் செய்வார்கள். உபாத்தியாயர் நெடுங்கணக்கைச் சொல்லிக் கொடுக்க மாணாக்கன் அதனைப் பின்பற்றிச் சொல்லுவான். இப்படி உபாத்தியாயர் ஒன்றைச் சொல்ல அதை மாணாக்கர்கள் பலரும் சேர்ந்து சொல்வதை ‘முறை வைப்ப’ தென்று கூறுவார்கள். உபாத்தியாயருக்குப் பிரதியாகச் சில சமயங்களில் சட்டாம்பிள்ளை முறை வைப்பதுண்டு.<br>**மையாடல் :**<br>**‘ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்’ - சிந்தாமணி**<br>சுவடிகளிலுள்ள எழுத்துக்கள் செவ்வனே தெரிவதற்காகச் சுவடியில் வசம்பு, மஞ்சள், மணத்தக்காளியிலைச்சாறு அல்லது ஊமத்தையிலைச்சாறு, மாவிலைக்கரி, தர்ப்பைக்கரி முதலியவற்றைக் கூட்டிச் செய்த மையை அதில் தடவுவார்கள். அந்த மை எழுத்துக்களை விளக்கமாகக் காட்டுவதோடு கண்ணுக்கும் குளிர்ச்சியைத் தரும். இங்ஙனம் மை தடவிப் புத்தகத்தை வாசிக்கத் தொடங்குவதனால் அக்ஷராபியாசத்தை ‘மையாடல் விழா’ என்று சொல்வார்கள்.<br>**எழுத்துப்பயிற்சி :**<br>பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். அதனால் அவர்களுடைய எழுத்துகள் வரிசையாகவும் நன்றாகவும் அமைந்தன. உபாத்தியாயர் முதலில் தரையில் | 6 | 6 |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

எழுத அதன் மேல் பிள்ளைகள் எழுதுவார்கள். எழுத்துக்கள் ஒன்றோடொன்று படாமல் வரிகோணாமல் பழைய காலத்தில் எழுதி வந்தார்கள். மாணாக்கர்களுக்கு எழுதும் பழக்கம் நன்றாக உண்டாக வேண்டுமென்று ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் அவர்களைத் தனித்தனியே ஏடுகளில் தாம் மேலே எழுதி அதைப்போல் எழுதிவரச் சொல்வார்கள்.

**எழுத்தாணி :**

எழுத்தாணி மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி என மூன்று வகைப்படும்.

**மனனப்பயிற்சி :**

தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதிநூல்கள் முதலியன பாடமாக இருந்தன. அவற்றை, அக்கால மாணவர்கள் பயின்றனர். கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று, நெல் இலக்கம் முதலிய வாய்பாடுகளைக் கட்டாயம் மனனம் செய்தனர். வியாபாரம் செய்வதற்கும் கோவிலில் பணி செய்வதற்கும் ஏற்றவாறு அமைந்த கணிதமுறை கட்டாயமாகக் கற்பிக்கப்பட்டதைக் **கதைப்பாடல்கள்** உணர்த்துகின்றன.

**வாதம் புரிதல்:**

மிகச் சிறந்த நூற்பயிற்சியுடையவர்கள் அரசவைகளில் வாதுபுரிந்து தம் கல்வித் திறமையை வெளிப்படுத்தினர் என **மதுரைக்காஞ்சி** எடுத்துக் கூறுகிறது.

வாதம்புரியும் பழக்கம் பாடசாலைகளிலிருந்தே வளர்ச்சியுற்று வந்தது. பள்ளிக்கூடத்தில் மாணாக்கன் நூல்பயிலும் இயல்பை விளக்கவந்த பழைய சூத்திரமொன்று பலவற்றைச் சொல்லிவிட்டு,

**“வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை**
**கடனாக் கொளினே மடநனி**
**இகக்கும்” - நன்னூல் 41** என்று முடிக்கின்றது.

ஆட்சேப சமாதானங்கள் சொல்லிப் பழகிய பழக்கங்களே முதிர்ந்த நிலையில் வாதங்களாக வளர்ச்சியுறுகின்றன.

**சாந்துணையும் கற்றல் :**

**“என் ஒருவன் சாந்துணையும் கல்லாத வாறு!”**

பல நூல்களையும் பள்ளிக்கூடத்தில் பயின்றதோடு நில்லாமல் வாழ்நாள் முழுதும் நம் நாட்டவர் படித்து வந்தனர். பள்ளிக்கூடத்திலிருந்து கற்கும் காலம் கடந்த பின்னர், பழைய காலத்தவர்கள் பின்பும் எங்கெங்கே கலைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இருந்தார்களோ, அங்கங்கே சென்று அவர்களிடம் தாம் முன்பு கல்லாதவற்றைக் கற்று வந்தார்கள்.

**ஓதற்பிரிவு :**

இல்லறம் நடத்தும் காலத்தில் கூட, வேற்று நாட்டுக்குச் சென்று அங்கங்கே உள்ளாருக்குத் தம்முடைய கல்வியைக் கற்பித்தும் வாதம் புரிந்து வென்றும், தாம் முன்பு அறியாதவற்றைக் கற்றும் வந்தனர். தொல்காப்பியமென்னும் பழைய இலக்கண நூலிலும் பிறவற்றிலும் இங்ஙனம் பிரியுங்காலம் ஓதற் பிரிவென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதற்கு மூன்று வருஷம் கால எல்லையென்று அந்நூல்கள் விதிக்கின்றன.

**முடிவுரை :**

காலத்தின் வேகம் அந்தப் பழைய காலத்துப் பள்ளிக்கூடங்களை மாற்றியமைத்துவிட்டாலும் அவற்றால் உண்டான நற்பயன்களையும், அவற்றில் படித்த பேரறிஞர்கள் நமக்கு ஈட்டி வைத்துள்ள நூற் செல்வத்தையும் நினைக்கும்போது, நாம் பெருமிதம் கொள்கிறோம்.

www.Padasalai.Net

(அல்லது)

www.Trb Tnpsc.com

ஆ)

**முன்னுரை :**

ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு என்பதில் நான் பார்த்து வளர்ந்த சென்னை நகரத்தைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**சென்னை :**

தென்னிந்தியாவின் நுழைவுவாயில் என்றழைக்கப்படும் சென்னை இன்று தமிழகமெங்கும் பரவி வாழும் தமிழர்களின் பண்பாட்டு அடையாளம். சென்னை இந்தியாவின் முதன்மை நகரங்களுள் ஒன்று மற்றும் தமிழகத்தின் தலைநகரம். சென்னை என்று அழைக்கப்படும் பகுதியும் அதன் சுற்றுப்பகுதிகளும் வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே வாழ்ந்ததற்கான தடயங்களைக் கொண்டுள்ளன.

**மானுட எச்சம் :**

பல்லாவரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்கோடரி இந்திய அகழ்வாய்வுத்துறை வரலாற்றில் திருப்புமுனையை ஏற்படுத்தியது. கூடுவாஞ்சேரி, பல்லாவரம், புழல் போன்ற பகுதிகளில் இன்று கிடைக்கும் மானுட எச்சங்கள் நமது பழமையை உணர்த்துகின்றன. இன்று சென்னையின் ஒரு பகுதியாக விளங்கும் மயிலாப்பூர் 2ஆம் நூற்றாண்டில் தாலமி என்பவரால் ‘மல்லியர்பா’ எனும் துறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது.

**பாடல் பெற்ற தலம் :**

திருவொற்றியூர், திருவான்மியூர், மயிலாப்பூர் ஆகியவற்றில் உள்ள கோயில்கள் பாடல் பெற்ற, ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தலமாக உள்ளன.

**நீர்நிலை – வடிகால் :**

வடசென்னைக்குக் கொற்றலையாறு, மத்திய சென்னைக்குக் கூவம், தென் சென்னைக்கு அடையாறு கீழே பாலாறு இவை நான்கும் இணைக்கும் பக்கிங்காம் கால்வாய், காட்டன் கால்வாய் இருந்தன. 18 பெரிய ஓடைகள், 540க்கும் மேற்பட்ட சிறிய ஓடைகள் என இயற்கையாய் வடிகால் பெற்றிருந்தது. ஆனால் அவை எங்கு போயின என்று தெரியவில்லை.

**நகரம் - உருவாக்கம் :**

செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே உள்ள வீடுகள் இருந்த பகுதி ‘வெள்ளையர் நகரம்’ என்றும் வெளியே இருந்த குடியிருப்பு ‘கருப்பர் நகரம்’ என்றும் அழைக்கப்பட்டது. கிழக்கிந்திய நிறுவனம் பெரும்பாலும் துணி வணிகத்தையே செய்தது. இதனால் நெசவாளர்கள் சென்னையை நோக்கி வந்தனர். அவர்கள் வாழ்ந்த பகுதிதான் வண்ணத்துக்காரன் பேட்டை என்பது வண்ணாரப்பேட்டை என்றும் சின்னதறிப்பேட்டை, சிந்தாதரிப் பேட்டை என்றும் தோன்றியது. வடசென்னையை மதராசப்பட்டினம் என்றும் தென்சென்னையைச் சென்னைப்பட்டினம் என்றனர். ஆங்கிலேயர் இரண்டையும் இணைத்து மதராஸ் என்று அழைத்தனர். அது இன்று சென்னையாக உள்ளது. ஆங்கிலேயரின் அதிகார மையமான இந்நகரம் ஆங்கிலேயரை எதிர்க்க முதல் தளமாக அமைந்த நகரமாக விளங்கியது.

**கல்லூரிகள் - பள்ளிகள் :**

1715இல் உருவான ‘புனித மேரி தேவாலய தர்மப் பள்ளி’.
1812இல் உருவான சென்னைக் கோட்டைக் கல்லூரி.
1837இல் உருவான கிறிஸ்துவக் கல்லூரி.
1840இல் பிரசிடென்சிபள்ளி (மாநிலக் கல்லூரி)
1857இல் சென்னைப் பல்கலைக்கழகம்

6

6

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

| | | | |
|---|---|---|---|
| | 1914இல் உருவான இராணிமேரிக் கல்லூரி.<br>போன்ற கல்லூரி பழமை வாய்ந்து அறிவின் நகரமாக விளங்குகிறது.<br>**பண்பாட்டு அடையாளங்கள் :**<br>சென்னையின் ஒவ்வொரு பகுதிக்கும் வரலாறு உண்டு. பண்பாட்டு அடையாளங்களை எண்ணிக்கையில் அடக்குவது கடினம். இந்திய சாரசனிக் கட்டடக்கலை இன்றும் சென்னையின் பழமையைப் பறைசாற்றுகின்றது. அந்த வகையில் உருவாக்கப்பட்ட கட்டடங்களாகத் தமிழ்நாடு ஆவணக் காப்பகம், எழும்பூர் அருங்காட்சியகம், கோட்டை அருங்காட்சியகம், கன்னிமாரா நூலகம் போன்றவை விளங்குகின்றன.<br>**நம் சென்னை (இன்றைய சென்னை) :**<br>இன்று சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல. அது நம்பிக்கை மையம். சென்னையை மையமிட்டு தொழிற்சாலைகளும், நிறுவனங்களும் ஏற்படுத்தி நேரடி, மறைமுக வாய்ப்புகள் உருவாகின்றன. கணினி மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் இன்று சென்னை முதலிடம் வகிக்கிறது. இந்திய அளவில் மென்பொருள் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கிறது. மின்னணுப் பொருள்கள் உருவாக்கும் மையமாகவும் திகழ்கிறது.<br>**முடிவுரை :**<br>இத்தகு பெருமைகொண்ட சென்னை நகரம் நான் பார்த்து வாழ்ந்த காலகட்டத்தில் பெருமைகொண்ட பழமையைப் பறைசாற்றும் நகரமாக விளங்குகிறது.<br>**(பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | | |
| 46. | **அ)**<br>**முன்னுரை :**<br>**“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு”**<br>செல்வராஜ் என்னும் இயற்பெயருடைய உத்தமசோழன் எழுதிய முதல்கல் என்ற கதையில் வரும் மருதன் ஊர் மீது அக்கறை உடையவன். பெருமழை பொழிந்து வெள்ளமான ஊரைச் சூழ்ந்து இருக்கும் நீரை வடிய வைத்து பயிர்களைக் காப்பாற்றும் முனைப்புடன் செயல்படும் மருதனின் பண்பு நலங்களை இக்கட்டுரை மூலம் அறிவோம்.<br>**கதைச்சுருக்கம்:**<br>**“முதல்வித்து மூவுலகுக்கும் சொத்து”**<br>வளவனாற்றங்கரையில் மருதன் நின்று மழைநீரில் மூழ்கும் பயிர்களைப் பார்த்து மனம் வருந்தி பயிர்களைக் காக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு மீன்பிடிக்கும் மாரிமுத்துவிடமும், வயதான காளியப்பனிடமும், படித்த பட்டதாரியான பிரேம்குமாரிடமும் நிலைமையை எடுத்துக் கூறுகிறார். யாரும் முன் வராததால் மனம் வருந்தி தன் மனைவியிடம் கூறுகிறான் மருதன். பின்பு தானே முன்வருந்து வளவனாற்றில் அடர்ந்து இருந்த நெய்வேலி காட்டாமணக்கை அறுத்து எறிகிறான். அதனைக் கண்ட அல்லி மற்றும் மாரிமுத்து அதைத் தொடர்ந்து ஊர்மக்களும் ஒன்றன்பின் ஒன்றாக வந்து வடிவாய்க்காலைச் சுத்தப்படுத்தினர்.<br>**என் மனம் கவர்ந்த கதைமாந்தர்:**<br>**‘முதல்ல நம்மாலே முடிஞ்சதை நாம செய்வோம்’** எனும் கூற்று மூலம் பிறரை எதிர்பார்க்காத குணம் கொண்ட ஊரைக் காக்கப் பாடுபட்ட மருதன் என் மனம் கவர்ந்த கதை மாந்தர் ஆவார். | ½<br><br>½ | 6 |

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

**பயிர்களின் நேசன் :**

**"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வடினேன்"** ½

பயிர் விளைச்சலுக்காக எந்த மழைக்காகக் காத்திருந்தார்களோ அந்த மழையே பயிர்களை மூழ்கடித்தால் எப்படி மனம் பொறுத்துக் கொள்ளும். பயிர்கள் வெள்ளத்தில் மூழ்குவதைக் கண்டதும் மருதன் வருத்தம் அடைகின்றான். ஊரில் உள்ள பல நபர்களிடம் உதவியும் கேட்கின்றான். எதுவுமே நடக்கவில்லை என்றதும் வேதனை அடைகின்றான். தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்த நெற்பயிர்கள் அத்தனையும், "என்னைக் காப்பாத்து, என்னைக் காப்பாத்து" என்று ½ அவனைப் பார்த்து வேண்டுவதாக உணர்கிறான். இரவு முழுவதும் தூக்கம் இல்லாமல் தவிக்கிறான்.

**ஊர் வளத்தைக் காப்பாற்றும் உயர்குணம்:**

**"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை"**

வடிவாய்க்கால் முழுவதும் இருபுறமும் சுவர்போல வளர்ந்திருந்த நெய்வேலி காட்டமாணக்குச் செடிகளை அப்புறப்படுத்தி விட்டால், பயிர்களைக் காப்பாற்றுவதுடன், ஊரையும் காப்பாற்றிவிடலாம் என்ற எண்ணம் அவன் மனதில் தோன்றியதும் மருதன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. வடிநீரை வடித்து ஊரைக் காப்பாற்றிவிடலாம் என்ற எண்ணம் வந்ததும், தான் தனியாகச் செய்து மதிப்பு அடையலாம் என்று எண்ணாமல் ½ அனைவருடனும் இணைந்து செயல்பட வேண்டும் என்ற எண்ணம் மேலிட ஒவ்வொருவரிடமும் உதவியைக் கேட்கும் உத்தம உயர்குணம் கொண்டவனாக மருதன் விளங்குகிறான்.

**கடமையை உயிராகக் கருதியவன்:**

**"ஊர் கூடித் தேர் இழுத்தால் நன்மை பயக்கும்"**

மருதன் காட்டாமணக்குச் செடிகளை அப்புறப்படுத்த மாரியிடம் உதவி கேட்கும் போதும், பெரிய மிரசாக வலம் வரும் காளியப்பனிடம் இது பற்றிப் பேசும் போதும்; கிராமத்தின் முதல் பட்டதாரியான பிரேம்குமாரிடம் பேசி ½ விவரத்தை விளக்கி ஏமாற்றம் அடையும் போதும்; தன் ஆற்றாமையைத் தன்மனைவி அல்லியிடம் கூறிப் புலம்பும் போதும் மனம் தளராமல் தன் கடமையை எப்படியாவது நிறைவேற்றிட வேண்டும் என்ற அவனது மன உறுதிப்பாடு புலனாகும். தனியாளாகச் செய்ய முடியாத இச்செயலுக்காக எல்லோரின் உதவியையும் மருதன் நாடுவது அவனது பொதுநலனை வெளிப்படுத்துகின்றது.

**மருதனின் பொதுநலன்:**

**"ஒற்றுமையே பலம்"** ½

அந்த ஊரில் இருந்த அறுபது வேலி நிலத்தில் ஒரு 'சக்கரைக்குழி' அளவு கூட நிலம் இல்லாத மருதன் பொதுநலனை மட்டுமே கருத்தில் கொண்டு, எப்படியாவது நீரை வடித்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடனே மருதன் இருக்கின்றான். மருதன் அவனுக்குப் புகழ் கிடைக்க வேண்டுமென்று செயல்படவில்லை. நீரில் மூழ்கும் அத்தனை பயிர்களையும் காப்பாற்ற வேண்டும்; ஊரினைச் சூழ்ந்திருக்கும் நீரினை வடிய விட வேண்டும் என்ற எண்ணமே அவனிடம் இருந்தது.

**ஊருக்கு வழிகாட்டிய தலைமைப்பண்புடையவன் :**

**"விரல்கள் பத்தும் மூலதனம்"**

இரவு முழுவதும் தூக்கமில்லாமல் தவித்த மருதன் ½ விடிவதற்குள் தனி ஒருவனாய் வடிவாய்க்காலில் இறங்கி இருபுறமும் சூழ்ந்திருந்த காட்டாமணக்குச் செடிகளை அரிந்து அப்புறப்படுத்தினான். இதனைக் கண்ட அவனது

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

<table>
<tr><td></td><td>மனைவி ஆல்லியும் உதவிக்கு ஓடி வர, வலையைப் பிடித்துக் கொண்டிருந்த மாரிமுத்துவும் அவனுடன் இணைய, செலவு வந்திடுமே என்ற எண்ணத்தால் மகள் வீட்டிற்குச் செல்வதாகக் கூறி வில் வண்டியில் சென்று கொண்டிருந்த மிராசு காளியப்பனும் வடிவாய்க்காலில் இறங்க ஊரே ஒன்றாகக் கூடிவந்து காட்டாமணக்குச் செடியை ஆர்வமாக அப்புறப்படுத்த மருதன், வழிகாட்டியாக விளங்கினான்.<br>கதை மாந்தரின் நற்பண்புகள் :<br>“வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்<br>வைத்தூறு போலக் கெடும்”<br>❖ பிரச்சனைக்கான வழி தேடும் பண்பு<br>❖ மனம் தளராமை<br>❖ பொதுநலம்<br>பயிர்கள் - மனித உயிருக்குச்சமம் எனும் எண்ணும் பண்பு<br>கதை மாந்தர் உணர்த்தும் நீதி :<br>கருமம் சிதையாமல் கண்ணோட்டமாக இருப்பவர்களுக்கு இந்த உலகமே சொந்தம்.<br>முடிவுரை :<br>“அழிவதூஉம் ஆவதூஉம் ஆரி வழிபயக்கும்<br>ஊதியமும் சூழ்ந்து செயல்”<br>சுயநலம் இல்லாமல், பொதுநலனைக் கருத்தில் கொண்டு நாமே செயலில் இறங்கினால் வெற்றி பெறலாம் என்ற உயர்ந்த குணம் உடையவான மருதன் இருப்பதைக் காணலாம். நமக்கு ஏன் வீண் வம்பு என்று ஒதுங்காமல் முதலில் நம்மால் முடிந்ததைச் செய்வோம் என்ற துணிவுடன் செயலில் இறங்கிய மருதன் தேர்வடத்தைப் பிடித்த முதல் கரமாக விளங்கினான்.</td><td>½<br><br>½<br><br>½</td><td></td></tr>
<tr><td></td><td>(அல்லது)<br>ஆ)<br>முன்னுரை :<br>பாதை என்பது பயணத்திற்காக மட்டுமே பந்தையத்திற்காக அல்ல.<br>‘சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு’ - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன எவை என்பதனை இக்கட்டுரையில் காண்போம்.<br>சாலை விபத்து பற்றி ஒரு கண்ணோட்டம் :<br>“வாழ்வை முழுமையாக்குவது பயணம்”<br>❖ நம் நாடுதான் உலகிலேயே அதிக சாலைப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது பெரிய நாடு.<br>❖ ஏறக்குறைய 55 இலட்சம் கிலோமீட்டர் சாலைகள் நம் நாட்டில் உள்ளன. 21 கோடிக்கும் மேற்பட்ட ஊர்திகள் நம் நாட்டில் உள்ளன.<br>❖ ஓர் ஆண்டில் ஏறக்குறைய 5 இலட்சம் விபத்துகள் நடக்கின்றன. தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே மிகுந்த சாலை விபத்துகள் நடக்கும் மாநிலமாக இருக்கிறது.<br>❖ இந்தியாவில் ஏற்படும் மொத்தச் சாலை விபத்துகளுள் 15 விழுக்காடு விபத்துகள் தமிழ்நாட்டில் நடப்பது வேதனைக்குரியது.<br>சாலை விபத்தைத் தடுக்கும் முறைகள் :<br>❖ சாலையின் வகைகள், மைல் கற்களின் விவரங்கள் பற்றித் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.<br>போக்குவரத்தினை முறைப்படுத்தும் குறியீடுகளுக்கும் போக்குவரத்துக் காவலர்களின் சாலை உத்தரவுகளுக்கும் ஏற்பச் சாலையைப் பயன்படுத்த வேண்டும்.</td><td>6</td><td></td></tr>
</table>

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

**“நடைமேடை நடப்பவர்களுக்கே ஓட்டுநர்களுக்கு இல்லை”**

❖ நடைமேடை நடைபாதையைப் பயன்படுத்துபவர்களையும் சாலையைக் கடப்பவர்களையும் அச்சுறுத்தக்கூடாது.

❖ சாலைச் சந்திப்புகளில் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. தேவையான இடங்களில் சரியான சைகையைச் செய்ய வேண்டும்.

❖ எதிரில் வரும், கடந்து செல்ல முற்படும் ஊர்திகளுக்கும் வழிவிட வேண்டும். தேவையெனில் வேகம் குறைத்து இதர வாகனங்களுக்குப் பாதுகாப்புடன் வழிவிட வேண்டும்.

❖ பிற ஊர்தி ஓட்டிகளுக்கு விட்டுக் கொடுப்பது சிறந்தது. இதர சாலைப் பயனாளிகளை நண்பராக எண்ண வேண்டும்.

❖ பள்ளி மாணவர்களிடம் சாலை விதிகள் மற்றும் விபத்துகளைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

**சாலை பாதுகாப்புக் குறியீடு:**

**“சாலைப் பாதுகாப்பு உயிரின் பாதுகாப்பு”**

❖ சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யவும் பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவுகின்றன.

❖ குறியீடுகளை மூன்றாகப் பிரித்து அறியலாம்.

❖ அவை உத்தரவுக் குறியீடுகள், எச்சரிக்கைக் குறியீடுகள், தகவல் குறியீடுகள் ஆகும்.

**அவசரம்! அவசரம்!**

❖ இன்றைய நவீன உலகில் அவசரம் என்கிற நோய் எல்லோரையும் பீடித்திருக்கிறது. வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு, போதிய பயிற்சியின்மை, தட்பவெப்பநிலை, இயந்திரக்கோளாறு, மிகுதியான ஆட்களையோ சரக்குகளையோ ஏற்றிச் செல்வது, தொடர்வண்டி இருப்புப் பாதைகளைக் கவனிக்காமல் கடப்பது போன்ற பல காரணங்களால் விபத்துகள் மிகுதியாக நடக்கின்றன.

❖ குறிப்பாக மது குடித்துவிட்டு ஊர்தி ஓட்டுவதால் நிறையவே விபத்துகள் நடக்கின்றன. இவைதான் பெரும்பாலான விபத்துகளுக்குக் காரணமாக அமைந்துவிடுகின்றன.

**கவனத்தில் கொள்ள வேண்டியவை:**

**“உரிமத்துடன், விவேகமுடன் ஓட்டுங்கள் வாழ்க்கை மிளிரும்.”**

❖ 18 வயது நிறைந்தவர்கள் மட்டுமே முறையான பயிற்சிகள் மூலம் ஓட்டுநர் உரிமத்தைப் பெற்று மிகுந்த கவனத்துடன் வாகனத்தை இயக்க வேண்டும்.

❖ இரு சக்கர வாகனத்தில் இருவர் மட்டுமே பயணிக்க வேண்டும்.

**“தலைதெறிக்கும் வேகத்தில் செல்லாதீர்கள் - தலை தெறிக்கும்!”**

❖ இரு சக்கர வாகன ஓட்டிகள் தலைக்கவசமும், நான்கு சக்கர வாகன ஓட்டிகள் இருக்கைப் பட்டையும் கட்டாயம் அணிய வேண்டும்

❖ வாகன ஓட்டுநர்கள் வலப்புறமாகவோ, இடப்புறமாகவோ திருப்பும் முன்பு அதற்குரிய விளக்கினை எரியச் செய்ய வேண்டும்.

❖ கைப்பேசியில் பேசிக்கொண்டும், காதணிக் கேட்பிகள் பொருத்திக் கொண்டும் வாகனம் ஓட்டுவதைத் தவிர்க்க வேண்டும்.

❖ சாலையில் ஊர்தியைக் குறுக்கும் நெடுக்குமாக இயக்குவதும், போட்டிப் பந்தயம் எனச் சொல்லி பொது

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| | வழியில் உச்ச வேகத்தில் ஓட்டுவதையும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதையும் கட்டாயம் தவிர்க்க வேண்டும்.<br>❖ தொடர்வண்டி இருப்புப்பாதைகளை மிகுந்த கவனத்துடன் கடக்க வேண்டும்.<br>❖ மனிதத் தவறுகளே மிகுதியான விபத்துக்களுக்குக் காரணமாக அமைவதால், தவறுகளைத் திருத்திக்கொள்ளுதல், விதிகளைப் பின்பற்றுதல் வாயிலாக மட்டுமே சாலை விபத்துகளைத் தடுக்க முடியும்.<br>❖ சாலைப் பாதுகாப்பிற்கான விழிப்புணர்வைப் பெறுவதன் மூலம் எதிர்காலத்தில் சாலை விபத்துகளே இல்லாத தமிழகத்தை உருவாக்க முடியும்.<br>**முடிவுரை :**<br>**“போதையுடன் ஓட்டாதீர்கள் - வாழ்க்கையின் பாதை முடிந்துவிடும்!”**<br>சாலை விதிகளைப் பின்பற்றிப் பயணங்களை மேற்கொள்ளும் பொழுது விபத்தில்லாத தமிழ்நாடு உருவாகும்.<br>**(பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | | |
| | **பகுதி - V**<br>**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** | | **4+2 = 6** |
| 47. | **அ) புறநானூறு**<br>அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,<br>வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்<br>காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;<br>மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்<br>மழுவுடைக் காட்டகத்து அற்றே<br>எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே.<br>**- ஔவையார்**<br>**ஆ)** அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை<br>வேண்டும் பிறன்கைப் பொருள். | 4<br><br>2 | 6 |

**ஆக்கம் - தமிழ்த்துறை**

**ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி**




kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com




kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com




kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com


BE(CSE)
RAGUL S
INDUSTAN ENGINEERING COLLEGE, COVAI
BE (AI&DS)
RANJITH D
CIT COLLEGE OF ENGINEERING COVAI
BE(CSE)
SHARVESH B
VSB ENGINEERING COLLEGE COVAI
BE(ECE)
SUJITH S
INDUSTAN COLLEGE OF ENGINEERING, COVAI
BE(CSE)
YUVANSHANKAR S
KONGU ENGINEERING COLLEGE, PERUNDURAI
BE(Bio-Medical)
POOJA M
KPR ENGINEERING COLLEGE COIMBATORE
B.Tech(IT)
SRI HARINI P
KARPAGAM COLLEGE OF ENGINEERING, COIMBATORE
B.Tech(Bio.Tech)
JEEVITHA G T
VIVEKANANDA COLLEGE OF ENGINEERING, ELAYAMPALAYAM
BE(ECE)
KANIKA S
VIVEKANANDA COLLEGE OF ENGINEERING COLLEGE, ELAYAMPALAYAM
B.Tech(AI&DS)
SUBHASHREE HARINI N
VELLALAR ENGINEERING COLLEGE, THINDAL
B.Tech(AGRI)
PRAGADHI C
MANGAIKARASI ENGINEERING COLLEGE, MADURAI
BE(E&I)
ELAKKIYA R
PERUNDURAI KONGU ENGINEERING COLLEGE
BE(EEE)
DHARSHINI S
KARPAGAM COLLEGE OF ENGINEERING, COIMBATORE
BE(EEE)
HARSHINI B
KARPAGAM COLLEGE OF ENGINEERING, COIMBATORE
BE(ECE)
KANISHKA M P
SNS ENGINEERING COLLEGE, COIMBATORE
BE(ECE)
MADHU PRIYA P
NGP COLLEGE, COIMBATORE
BE(CS)
MONIKA S
SRM COLLEGE OF ENGINEERING, TRICHY
BE(CS)
CHARUMATHI A K
JJ COLLEGE OF ENGINEERING, TRICHY
AIML
SHANCHITHA M
M.KUMARASAMY COLLEGE OF ENGINEERING, KARUR
BE(ECE)
VARSHA C
KALAINAR KARUNANITHI INSTITUTE OF TECHNOLOG COIMBATORE
B.Tech(AI&DS)
KANISHKA L
KUMARAGURU COLLEGE OF ENGINEERING, COIMBATORE
BE(CSE)
SONIKA M
KONGU ENGINEERING COLLEGE, PERUNDURAI
BE(CSE)
SUNITHA B
KARPAKAM INSTITUTE OF (COIMBATORE)
B.Tech(Bio-Tech)
NITHIKA H
KUMARAGURU COLLEGE OF ENGINEERING, COIMBATORE
B.Tech(AI&DS)
SINDHUJA R
KONGU ENGINEERING COLLEGE, PERUNDURAI
B.Tech(IT)
VARSHINI P
KONGU ENGINEERING COLLEGE, PERUNDURAI
BE(CSE)
AKSHAYA A
AVINASILINGAM, COIMBATORE
BE(CSE)
BHUMIKA S
SALEM KARUPPOOR ENGINEERING
2022-2023 ஆம் ஆண்டில் PILOT & BDS & LAW கல்லூரியில் சேர்ந்த மாணவர்கள்
PILET
DEEPAKRAJ R
KERALA, THIRUVANANDHAPURAM
BA.LLB
CARLINE MARY A
BANGALORE CHRIST UNIVERSITY
BDS
VIDHYA K
NANDHA COLLEGE PERUNDURAI
LAW
THARUN A
KALASALINGAM UNIVERSITY VIRUTHUNAGAR
B.Pharm
SAKTHIKUMARAN S
COUNCELLING
D.Pharm
SUBASIVAVELAN K
SALEM VINAYAGA MISSION
BA.LLB
MOHITH K
KAVITHA'S LAW COLLEGE, CHENNAI




kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com




# ஸ்ரீ வித்யபாரதி

## மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

கனவுகள் மெய்ப்பட வேண்டும். சக்கராம்பாளையம், எலச்சிபாளையம், திருச்செங்கோடு (வ), நாமக்கல் (மா) - 637 202.

www.shrividhyabharathi.com Email : vidhyabharathi.123@gmail.com

## 2024 - 2025 ஆம் கல்வியாண்டிற்கான KG முதல் XII வரை அட்மிஷன் நடைபெறுகிறது



**பள்ளியின் சிறப்பம்சங்கள்:**

- FOUNDATION, NEET, JEE, UPSC ,OLYMPIAD (For VI to XII)
- குழந்தைகளுக்கு விளையாட்டு மூலம் கற்றல் கற்பித்தல் (Play Way Method)
- Montessori தரத்தில் கற்றல் கற்பித்தல் நடைபெறுகிறது.
- KG குழந்தைகளுக்கு தரமாகவும், சுவையாகவும் மதிய உணவு வழங்கப்படுகிறது.
- KG - II Std வரை CBSE கற்பித்தல் முறை பின்பற்றப்படுகிறது.
- சிறந்த அழகிய கையெழுத்துப்பயிற்சி (தமிழ், ஆங்கிலம் மற்றும் ஹிந்தி) அளிக்கப்படுகிறது.
- சிறப்பாக ஆங்கிலத்தில் பேசும் பயிற்சி (Communicative English) அளிக்கப்படுகிறது.
- ஒவ்வொரு மாணவர் மீதும் கனிவான தனிகவனம் செலுத்தப்படுகிறது.
- கதை, கவிதை, கட்டுரை, ஓவியம் மற்றும் பேச்சாற்றலுக்கான சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது
- தமிழ், ஆங்கிலம், ஹிந்தி வாசித்தல் திறனை மேம்படுத்தும் வகையில் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.
- ஹிந்தி தேர்வுகளுக்கு (ப்ராத்மிக், மத்யமா, ராஷ்ட்ரபாஷா) தேர்வு மையமாக செயல்படுகிறது.
- ஒவ்வொரு வார இறுதியிலும் புரிதல் தேர்வு (Understanding Test) நடைபெறுகிறது.
- பாடவாரியாக Club அமைத்து Activity நடைபெறுகிறது .
- சிலம்பம், வில்வித்தை, கராத்தே, பரதம், மேற்கத்திய நடனம், துப்பாக்கிச்சுடுதல் ஆகிய Extracurricular Activity வகுப்புகள் சிறந்த முறையில் நடைபெறுகிறது.



- Education Oriented Field Trip அழைத்துச் செல்லப்படுகிறது.
- Computer பயிற்சி சிறந்த முறையில் அளிக்கப்டுகிறது.
- மன அமைதி மற்றும் ஞாபக சக்தியை மேம்படுத்துவதற்காக யோகா வகுப்புகள் நடத்தப்படுகிறது.
- மாணவர்கள் Chess ல் சிறந்து விளங்க Chess வகுப்புகள் சிறந்த முறையில் நடைபெறுகிறது.
- ஒவ்வொரு பருவத் தேர்வு இறுதியிலும் School Level Achievement Survey - Test நடத்தப்படுகிறது.
- மாணவர்களின் உடல் திறனை மேம்படுத்தும் வகையில் விளையாட்டுப் பயிற்சிகள் (Indoor And Outdoor Games) அளிக்கப்படுகிறது.

**செல்: 99655 31727, 99655 35967, 94422 88402, 80726 68664**


kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net
1361288
www.Trb Tnpsc.com
**7401**

பதிவு எண் | 6 | 3 | 3 | 6 | 1 | 6 | 2 |

# மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. **14x1=14**

1. ''மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ் !''
- இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்.

(அ) அடிஎதுகை, சீர்மோனை (ஆ) அடிமோனை, அடிஎதுகை
(இ) சீர்எதுகை, அடிமோனை (ஈ) சீர்மோனை, சீர்எதுகை

2. பொருத்தி விடை தேர்க.

(1) குரங்குகள் (i) கன்றுகளைத் தவிர்த்தன
(2) விலங்குகள் (ii) மரங்களிலிருந்து வீழ்ந்தன
(3) பறவைகள் (iii) குளிரால் நடுங்கின
(4) பசுக்கள் (iv) மேய்ச்சலை மறந்தன

(அ) (1) - (iii), (2) - (ii), (3) - (i), (4) - (iv)
(ஆ) (1) - (i), (2) - (iii), (3) - (iv), (4) - (ii)
(இ) (1) - (ii), (2) - (i), (3) - (iii), (4) - (iv)
(ஈ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)

[ திருப்புக

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

3. 'பலர் துஞ்சவும் தான் துஞ்சான்' - விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும் :

(அ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர்

(ஆ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர்

(இ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

(ஈ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்

4. 'விளியறி ஞமலி' – இதில் குறிப்பிடப்படும் விலங்கு :

(அ) நாய் (ஆ) எருது (இ) யாளி (ஈ) குதிரை

5. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

(அ) கடுக்காய் (ஆ) வசம்பு

(இ) மாவிலைக்கரி (ஈ) மணத்தக்காளியிலைச் சாறு

6. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம். காரணம் :

(அ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு

(ஆ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை

(இ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்

(ஈ) (அ), (ஆ), (இ) அனைத்தும்

7. சரியானவற்றைப் பொருத்தித் தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | காதை | (i) | கந்தபுராணம் |
| (2) | சருக்கம் | (ii) | சீவகசிந்தாமணி |
| (3) | இலம்பகம் | (iii) | சூளாமணி |
| (4) | படலம் | (iv) | சிலப்பதிகாரம் |

(அ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)

(ஆ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

(இ) (1) - (iv), (2) - (iii), (3) - (i), (4) - (ii)

(ஈ) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

8. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல் ...
- தொடர்களில் வெளிப்படும் செய்திகள்.

(1) மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்

(2) ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்

(அ) (1) தவறு; (2) தவறு (ஆ) (1) சரி; (2) தவறு

(இ) (1) சரி; (2) சரி (ஈ) (1) தவறு; (2) சரி

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

9. எளியது, அரியது என்பன :

(அ) சிறுமை பல செய்வது - பகைவர் தொடர்பு

(ஆ) தீயினத்தின் துணை - நல்லினத்தின் துணை

(இ) மெய்ப்பொருள் காண்பது - உருவுகண்டு எள்ளாதது

(ஈ) சொல்வது - சொல்லியபடி செய்வது

10. 'உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில்'

- இத்தொடரில் இடம் பெற்றுள்ள பெயரெச்சம்.

(அ) வளர்ந்த (ஆ) உண்டு (இ) இடந்தனில் (ஈ) பிறந்து

11. ச.த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல் :

(அ) சமணமும் தமிழும் (ஆ) பௌத்தமும் தமிழும்

(இ) கிறித்தவமும் தமிழும் (ஈ) இசுலாமும் தமிழும்

12. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி :

(அ) அங்கதம் (ஆ) குறியீடு (இ) தொன்மம் (ஈ) படிமம்

13. பிழையான தொடரைக் கண்டறிக.

(அ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.

(ஆ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

(இ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

(ஈ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

14. தோப்பில் முகமது மீரானுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றுத் தந்த நூல் :

(அ) கூனன் தோப்பு (ஆ) துறைமுகம்

(இ) சாய்வு நாற்காலி (ஈ) ஒரு குட்டித் தீவின் வரைபடம்

[ திருப்புக

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு** விடை தருக. 3x2=6

15. ஞாலத்தின் பெரியது எது ?

16. நெடுநல்வாடை – பெயர்க்காரணம் தருக.

17. வசனம், கவிதை – வேறுபாடு தருக.

18. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு** விடை தருக. 2x2=4

19. புக்கில், தன்மனை – சிறு குறிப்பு எழுதுக.

20. முறை வைப்பு என்றால் என்ன ?

21. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு** விடை தருக. 7x2=14

22. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை ?

23. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

மாணவர்கள் பெற்றோர்களைத்தமது நண்பர்களாகப்பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களைப்பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

24. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

25. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

26. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்கவும்.

தின்மை – திண்மை

27. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

(அ) செய்த (ஆ) கலங்கி

28. கலைச் சொல்லாக்கம் தருக.

(அ) Stapler (ஆ) Teller

**குறிப்பு : செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.**

பின்வரும் உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்திடுக.

அச்சாணி இல்லாத தேர் போல

29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

(அ) உரனுடை (ஆ) தலைக்கோல்

30. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்கவும்.

(அ) கோவில் (ஆ) தாமரை

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு** விடை தருக. 2x4=8

31. 'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்'

– இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

32. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

33. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

34. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

[ திருப்புக

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு** மட்டும் விடை தருக. 2x4=8

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்குக.

36. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்கவும்.

37. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

38. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு** விடை தருக. 3x4=12

39. (அ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.
- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

**அல்லது**

(ஆ) உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக :

(மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள் கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி !

**- கண்ணதாசன்**

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

**41.** (அ) வாகைத் திணையைச் சான்று தந்து விளக்குக.

**அல்லது**

(ஆ) செவியறிவுறூஉ துறையைச் சான்றுடன் விளக்குக.

**42.** பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

(அ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.

**அல்லது**

(ஆ) ஊழி பெயரினும் தாம் பெயரார்.

**43.** தமிழாக்கம் தருக.

(1) If you want people to understand you, speak their language.

(2) A new language is a new life.

(3) The limits of my language are the limits of my world.

(4) Knowledge of languages is the doorway to wisdom.

**செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.**

கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

ஐந்தரை வயதில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் ஒருவர், தன் குடும்பத்தாரிடமே கல்வி கற்றார். கதை கூறுவதில் ஆர்வம் கொண்டிருந்த அவர் தன் கற்பனை ஆற்றலால் தோழியர்களுக்கும் புதிய கதைகளை உருவாக்கிக் கூறினார். அதைக் கண்ட அவரது கணவர் அப்பெண்ணின் படைப்பாற்றலை ஊக்குவிக்கப் பல நாடகங்களுக்கு அழைத்துச் சென்றார். அப்பெண்ணுக்கு நாடகம் எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ஆனால் ஓரளவு மட்டும் எழுதத் தெரிந்த தன்னால் நாடகம் எப்படி எழுத முடியும் என்று அவர் வருந்திய போது, அவரது தோழி, நாடகத்தை அவர் சொல்லச் சொல்லத் தான் எழுதுவதாகக் கூறி ஊக்கப்படுத்தினார். இப்படித்தான் அப்பெண் தன்னுடைய முதல் நூலான 'இந்திர மோகனா' என்ற நாடக நூலை வெளியிட்டார். அவர் தான் 'நாவல் ராணி', 'கதா மோகினி', 'ஏக அரசி' என்றெல்லாம் தம் சமகால எழுத்தாளர்களால் அழைக்கப்பட்ட வை.மு.கோ. ('வைத்தமாநிதி முடும்பை கோதைநாயகி') ஆவார்.

**வினாக்கள் :**

(1) ஐந்தரை வயதில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் யார் ?

(2) வை.மு. கோதைநாயகியின் படைப்பாற்றலை ஊக்குவித்தவர் யார் ?

(3) வை.மு. கோதைநாயகி அவர்கள் எழுதிய முதல் நாடக நூல் எது ?

(4) "கதா மோகினி" என்று அழைக்கப்பட்ட பெண் எழுத்தாளர் யாரிடம் கல்வி கற்றார் ?

[ திருப்புக

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

## பகுதி – IV

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. **3x6=18**

**44.** (அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

**அல்லது**

(ஆ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.

**45.** (அ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

**அல்லது**

(ஆ) ''ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு'' – நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.

**46.** (அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு'

– இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை ?

## பகுதி – V

**47.** **அடிபிறழாமல் செய்யுள் வடிவில்** விடை தருக. **4+2=6**

(அ) ''அறிவும்'' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

(ஆ) 'பொருள்' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

- o O o -

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com